# 19-10-2024 செய்தி

## தேசிய கற்றல் வாரம்: இன்று தொடங்குகிறார் பிரதமர் மோடி

- மிஷன் கர்மயோகி அல்லது குடிமைப் பணிகள் திறன் கட்டமைப்புக்கான தேசிய திட்டம் கடந்த செப்டம்பர் 2020-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- அதன்பின்னர் கணிசமாக முன்னேற்றம் கண்ட இத்திட்டம், உலகளாவிய தரத்துக்கு அரசு ஊழியர்களின் திறனை மேம்படுத்தி வருகிறது.
- அரசு ஊழியர்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்கு புதிய உத்வேகத்தை வழங்கும் மிகப்பெரிய நிகழ்வாக தேசிய கற்றல் வாரம் இருக்கும்.
- இது 'ஒற்றை அரசு' என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதையும், தேசிய இலக்குகளுடன் அதிகாரிகளை சீரமைப்பதையும், வாழ்நாள் முழுவதும் கற்றல் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தனிப்பட்ட பங்கேற்பாளர்கள், துறைகள், அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்கள் என பல்வேறு வகையில் இந்த கற்றல் நிகழ்வு நடைபெறும்.
- இதில் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் நான்கு மணிநேர திறன் - இணைக்கப்பட்ட பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பங்கேற்பாளர்கள் ஐஜிஓடி என்ற இணையவழி கற்றல் தளம் மூலம் தங்கள் பொது விரிவுரைகள் மற்றும் கொள்கை முதன்மை வகுப்புகளை முடிக்கலாம்.
- இதைத் தொடர்ந்து, பொது மக்களை மையமாகக் கொண்டு அவர்களது பணியை மேம்படுத்தும் வகையில் பொதுப்பணித் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடன் கருத்தரங்குகள் மற்றம் பயிலரங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

## 16-ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாடு

- பிரேஸில், ரஷியா, இந்தியா, தென்னாப்பிரிக்கா, சீனா, ஈரான், சவூதி அரேபியா, எத்தியோப்பியா, எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் பிரிக்ஸ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.
- இந்தக் கூட்டமைப்பின் 16-ஆவது உச்சி மாநாடு ரஷியாவின் கசான் பகுதியில் அக்டோபர் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.
- உச்சி மாநாட்டின் நிகழாண்டு கருப்பொருள், 'உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கான பலதரப்பு வாதத்தை வலுப்படுத்துதல்' ஆகும்.
- பிரிக்ஸ் கூட்டமைப்பு மூலம் தொடங்கப்பட்ட முயற்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடவும், எதிர்கால ஒத்துழைப்பின் சாத்தியக்கூறுகளை ஆராயவும் இந்த மாநாடு உரிய வாய்ப்பாக அமையும்.